பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**ஒப்பந்தக்காரர்களின் சகல ஆபத்து காப்புறுதிப் பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

ஒப்பந்தக்காரர்களின் சகல ஆபத்து காப்புறுதிப் பத்திரமானது, நிர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைகளுக்கு ஏற்படும் எதிர்பாரா பௌதீக இழப்பு, சேதம் என்பவற்றுக்கும், அத்துடன் நிர்மான காலத்தின் போது ஏற்படும் மூன்றாம் தரப்பு மீதான பொறுப்புக்களுக்கும் பூரண காப்பீடு வழங்கும்.

வேலைத் திட்டம் தொடங்குவது அல்லது காப்புறுதி செய்யப்பட்ட பொருட்கள் வேலைத் திட்ட தளத்தில் கொண்டிறக்கப்படுவது ஆகிய இரண்டில் எது முந்தியதோ அதிலிருந்து ஆரம்பமாகி, முடித்து கையளிக்கும் வரை அல்லது வேலைகள் ஆரம்பிக்கும் வரை காப்பீடு செயற்படும்.

**2. காப்பீடு செய்யப்பட்டவை யாவை?**

**பிரிவு 1 – முக்கிய சேதம்**

- ஒப்பந்த வேலைகள், நிர்மான அமைப்பு, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு ஏற்படும் எதேச்சையான பௌதீக இழப்பு அல்லது சேதம்.
- வேறாக காப்புறுதி செய்யப்பட்டிருப்பின், இடிபாடுகளை அகற்றுதல்.
- ஏதும் தற்போதுள்ள சொத்து.

**பிரிவு 2– மூன்றாம் தரப்பு பொறுப்பு**

மூன்றாம் தரப்பினரின் எதேச்சையான உடற் காயம் அல்லது நோய்க்கான சட்டபூர்வ பொறுப்பு.

மூன்றாம் தரப்பினரின் சொத்துக்களின் எதேச்சையான இழப்பு அல்லது சேதம்.

**3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

- விளைவாந்தன்மையான இழப்புக்கள் (உ+ம். தாமதம், தண்டங்கள்)
- (முறையாக செயற்படுத்தப்பட்ட அம்சங்களின் விபத்துக்களினால் விளையும் சேதங்கள் தவிர்த்து) பிழையான வடிவமைப்பு அல்லது குறைபாடுள்ள பொருட்கள்.
- தேய்மானம், அரிப்பு அல்லது சிதைவடைதல்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

ஏதும் சம்பவங்கள் அல்லது இழப்பு இயன்றளவு சீக்கிரமாக எமக்கு அறிவிக்கப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளான சொத்து பார்வைக்காக பாதுகாக்கப்பட வேண்டும். அதே வேளை, கோரப்படும் எல்லா தகவல்களும் ஆதார ஆவணங்களும் உட்பட கோரிக்கையின் செயன்முறை முழுவதும் முழு ஒத்துழைப்பும் மொத்த வருமானம் மற்றும் மொத்த இலாபம் போன்ற சம்பந்தப்பட்ட விபரங்கள் வழங்கப்பட வேண்டும்.

கோரத்தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்,

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk | 🌐 www.insuranceombudsman.lk

**7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான

தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்